இந்திய அரசியலமைப்பு

பகுதி - 4

குழந்தைகள் / பெண்கள் / சட்டங்கள்

1. ஆங்கிலேயர் காலத்திலேயே சட்டசபையில், குழந்தைகளின் கல்வி உரிமையின் அவசியத்தை எடுத்துரைத்தவர் யார்? கோபால கிருஷ்ண கோகலே.
2. கோபால கிருஷ்ண கோகலேவின் கனவுத் திட்டமான, 'கல்வி உரிமைச் சட்டம்' கொண்டுவரப்பட்ட நாள்? 01 ஏப்ரல், 2010.
3. 'கல்வி உரிமைச் சட்டம்' --- 6 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு கல்வி ஓர் அடிப்படை உரிமையாகும்.
4. இளம் குற்றவாளிகள் நீதிச் சட்டம் --- 1986 நிறைவேற்றப்பட்டு, 2000 - ல் மாற்றியமைத்து நடைமுறைபடுத்தப்பட்டது.
5. தாய்ப்பாலுக்கு மாற்றாக உணவுப் புட்டிகள் மற்றும் குழந்தை உணவு திட்டம் --- 1992.
6. குழந்தைகள் உரிமைகளை பாதுகாக்கும் பொறுப்பானை குழுச் சட்டம் --- 2005.
7. குழந்தைகள் பாதுகாப்பையும், வளர்ச்சியையும் பற்றி கூறும் இந்திய அரசியலமைப்பு சரத்து --- சரத்து - 39 (F), சரத்து - 45.
8. குழந்தைகளின் அடிப்படை உரிமைகள் பற்றிய இந்திய அரசியலமைப்பு சரத்து --- சரத்து - 24 (குழந்தை தொழிலாளர் முறையிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கிறது).

9. 14 வயதுக்குட்பட்ட எந்த குழந்தையும் ஆலைகளிளும், சுரங்கங்களிலும், அபாயகரமான தொழில்களை குழந்தைகள் செய்வதை தடுக்கும் சரத்து --- 39(F).
10. குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சி பற்றி கூறும் இந்திய அரசியலமைப்பு சரத்து --- சரத்து - 45.
11. ஒருங்கினைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (ICDS) --- 1975.
12. ஒருங்கினைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (ICDS) - 1975 - ன் நோக்கங்கள் --- 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள், கர்பிணி தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் உடல் நலத்தை பாதுகாப்பது பற்றியது.
13. இராஜிவ் காந்தி குழந்தைகள் காப்பகத் திட்டம் (2006) --- வேலைக்கு செல்லும் தாய்மார்களின் குழந்தைகளை பேணி பாதுகாக்கும் திட்டம்.
14. குழந்தைகள் தினம் --- நவம்பர் - 14.
15. 6 முதல் 14 வயது வரை உள்ள முதன்மையான குழந்தைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தன்று வழங்கப்படும் தேசிய விருதுகள் எந்த ஆண்டிலிருந்து வழங்கப்படுகிறது --- 1996.
16. பணி மற்றும் பயிற்சி ஆதார திட்டம் --- பெண்களுக்கான வேலை வாய்ப்பு பயிற்சி திட்டம் (1996).
17. சுயம்சிதா --- சுயவம்சம் திட்டம் (பெண்கள் சுய உதவிக் குழுக்கள் மூலமாக பெண்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டுகிறது.

18. 1829 ஆம் ஆண்டு சட்டத்தின்படி, உடன் கட்டை ஏறும் பழக்கம் ஒழிக்கப்பட்டது.
19. விதவைகள் மறுமணச் சட்டம் இயற்றப்பட்டது? --- 1856.
20. சம ஊதிய சட்டம் - 1967 --- ஆண், பெண் இருபாலருக்கும் சம பதவிக்கு சம ஊதியம் சட்டம்.
21. தொட்டில் குழந்தை திட்டம் --- 1992 (பெண் சிசுக் கொலையை தடுப்பதற்காக).
22. தமிழ்நாடு முழுவது பெண்கள் காவல் நிலையம் --- பெண்கள் பாதுகாப்பு.
23. எந்த ஆண்டை ஐ.நா. சபை, "உலக பெண்கள் ஆண்டாக" அறிவித்துள்ளது? --- 1978.
24. மருத்துவர் பட்டம் பெற்ற முதல் இந்தியப் பெண்மணி --- டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி.
25. சென்னை சட்டமன்றத்தில் நியமிக்கப்பட்ட முதல் இந்தியப் பெண்மணி --- டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி.
26. "ஆடவரைப் போலவே பெண்களுக்கும் வாக்குரிமை மற்றும் சொத்துரிமை வேண்டும்" என கூறியவர் யார்? --- டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி.
27. டாக்டர். முத்துலட்சுமி வகித்த உயர் பதவிகள் --- சென்னை சட்டமன்றத்தின் துணைத் தலைவர், அகில இந்திய மகளிர் மன்றத்தின் முதல் தலைவர், சென்னை நகராட்சியின் முதல் அதிகாரியாகவும் இருந்தார்.

28. கொடிய புற்று நோயின் கொடுமையிலிருந்து மக்களை காப்பாற்ற சென்னை அடையாற்றில் புற்று நோய் மருத்துவமனையை கட்டிய டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி, புற்று நோய் தொடர்பான சிகிச்சைகளைகளை எங்கு பயின்று வந்தார் --- லண்டன், 'ராயல் புற்று நோய் மருத்துவமனை.

29. ஆதரவற்ற பெண்களுக்கான புணர்வு வாழ்வு மையம் போன்ற செயல்பாடுகளை செய்தவர்? டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி.

30. பெண்களுக்கு பொட்டு கட்டி, 'தேவதாசியாக' மாற்றுவதை தடுக்கும் வகையில், 'தேவதாசி தடைச் சட்டத்தை' சட்டமன்றத்தில் கொண்டுவந்தவர்? டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி.

31. பெரும் எதிர்ப்புகளுக்கு இடையில், யாருடைய ஆதரவுடன் சட்ட மன்றத்தில், தேவதாசி தடைச் சட்டத்தை கொண்டுவந்தார் டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி? 'சுயமரியாதை இயக்கத்' தலைவர், ஈ.வே.ராமசாமி.

32. 'தேவதாசி தடைச்சட்டத்தின்' அவசியத்தை மக்களிடம் கொண்டு சென்றவர்கள்? ஈ.வே.ரா பெரியார், மூவலூர் இராமாமிர்தம் அம்மாள், "தமிழ்த் தென்றல்" திரு.வி.க.

33. கைவிடப்பட்ட அபலைப் பெண்களை காத்திட, 1930 ஆம் ஆண்டு அடையாற்றில், டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி துவங்கியது? 'அவ்வை இல்லம்'.

34. டாக்டர். முத்துலட்சுமி ரெட்டிக்கு, மத்திய அரசு 'பத்ம பூஷண்' விருதினை வழங்கிய ஆண்டு? 1956.

35. டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி அவர்களின் பெயரில் கருவுற்ற தாய்மார்களுக்கு ரூ.6,000/- உதவித் தொகை வழங்கப்படும் திட்டத்தின் பெயர் என்ன? டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி தாய் சேய் நலத்திட்டம்.

Winmeen